# சிக்கனமான செலவில் துளசி சாகுபடி



சிக்கனமான செலவில் துளசி சாகுபடி செய்து, லாபத்தை அறுவடை செய்து வருகிறார்கள் மதுரை, திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் சிலர்!

ஏக்கருக்கு அதிகபட்சமாக ஐயாயிரம் ரூபாய் செலவு செய்தால், நடவு செய்த நாற்பத்தி ஐந்தாவது நாளிலிருந்து சுமார் ஐந்து ஆண்டுகள் வரை தினமும் துளசியை அறுவடை செய்து பணம் பார்க்கலாம் என்கின்றார் இந்தப் பகுதி விவசாயிகள்!

திண்டுக்கல் மாவட்டம், கல்லுப்பட்டி விவசாயி சூசைமாணிக்கம் கூறுகையில் ஒய்.நியூ (Y.New) டிரஸ்ட் நடத்துகிறவர்கள் துளசி சாகுபடியை பத்திச் சொன்னார்கள்.

60 சென்ட் நிலத்தில் துளசியை நட ஆரம்பிச்சிட்டேன். மொத்தம் இருபத்தி இரண்டு நிறை (பாத்தி) இருக்கிற மாதிரி பிரிச்சு ஒரு டன் தொழுஉரத்தை மட்டும் போட்டு மார்கழி கடைசியில் துளசியை நட்டேன். நாற்பத்து ஐந்தாவது நாளில் இருந்து தினமும் அறுத்துகிட்டு இருக்கேன்.

ஒரு அறுப்புக்கு ஒரு நிறையில்.. நூறுல இருந்து நூத்திபத்து முடி (கட்டு) கெடைக்கும். பச்சைத் துளசியை திண்டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு கொண்டு போயிடுவேன். ஒரு முடி ரெண்டு ரூவா வரைக்கும் விக்கும்.

மருந்தடிக்கிற வேலையே இல்லை. நாள்தோறும் நூத்தம்பதுல இருந்து இருநூறு ரூபாய் வரைக்கும் கிடைக்கிறது. மாதத்தில் சராசரியாக மூணாயிரத்து ஐநூறுலிருந்து நாலாயிரம் வரைக்கும் கிடைக்கும்.

மொத்த செலவு 5 ஆயிரம் ஆகியிருக்கு. இனி வருடத்திற்கு ஆயிரம் ரூபாய் செலவும், மாதத்திற்கு ஒரு களையும் எடுத்தால் போதும். காலையிலையும், மாலையிலையும் இரண்டு மணி நேரந்தான்

வேலை இருக்கும். முன்னர் எல்லாம் நாள் முழுக்க மாடா உழைத்தாலும் கடந்தான் மிஞ்சியது. இப்ப வேலையும் குறைவு, வருமானமும் அதிகம் என்று பூரித்தார்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் பகுதியைச் சேர்ந்த ஜெயந்தி (94430-70089), 40 ஏக்கரில் பயிரிட்டு அசத்தி வருகிறார்.

"இரண்டரை வருடமாகத்தான் துளசி சாகுபடியை செய்கிறேன். 10 ஏக்கரில் ஆரம்பம் வைத்து இப்பொழுது 40 ஏக்கர் வரைக்கும் வந்தாச்சி. 25 ஏக்கர் அளவில் இருக்கிற நெல்லிக்கு ஊடுபயிரா துளசியை போட்டிருக்கிறதும் இதுல, அடக்கம் ஊடுபயிராக போடுவதற்கு ஏத்தப் பயிர்தான் துளசி, பச்சை இலையாக அறுக்குவதை விட, விதைக்காகத்தான் நான் அதிகம் வளர்க்கிறேன். வருஷத்துக்கு ஒரு ஏக்கருல இருந்து நாலு தடவை விதை எடுக்கலாம். ஒரு எடுப்புக்கு மூணுல இருந்து நாலு கிலோ விதை கிடைக்கும். வருடத்திற்கு பன்னிரெண்டு கிலோவுக்கு குறையாது. கஜலோ 1,200 ரூபாய் வரைக்கும் விற்கிறது.

விதை போக கூடுதலா வருடத்திற்கு ஒரு ஏக்கரில் இருந்து இரண்டு டன் பச்சை இலை கிடைக்கிறது. டன் ஆறாயிரம் ரூபாய்க்கு விக்குது. பச்சை இலையை பெங்களூரில் இருந்தும் விதையை சித்த மருத்துவ கம்பெனிகாரங்களுக்கும் வாங்கிக் கொள்கிறார்கள். விவசாயிகளும் வாங்குகிறார்கள் என்றார்.

ஒய்.நியூ ட்ரஸ்ட்டின் செயலாளர் திரவியராஜிடம் (9842780640) கூறுகையில், "விவசாயிகள் முன்னேற்றத்துக்காக சேவை செய்யக்கூடிய தன்னார்வ அமைப்பு நடத்துகிறோம். இருக்கும் தண்ணியை வைத்து என்ன பயிர் சாகுபடி செய்யலாம் என்று விவசாயிகளை கலந்து பேசி குறைந்த நீரில் வளரும் ஒரு சில மூலிகைகளில்.. முதலில் துளசியை விவசாயிகளுக்கு கொடுத்துப் பார்த்ததில் சிறப்பான பலன் கிடைத்தது. துளசி சாகுபடி சம்பந்தமான இலவச ஆலோசனைகள் பெற விவசாயிகள் எங்களை அணுகலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தொடர்புக்கு:

மைதீன் அப்துல்காதர்

அலைபேசி: 94427-17442